ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2456/06 - 2025 සැප්තැම්බර් මස 29 වැනි සඳුදා - 2025.09.29

*2456/06 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி I : தொகுதி (I) - பொது*

## *அரசாங்க அறிவித்தல்கள்*

ச.வ.பி.3/2021(III)

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களைப் பதிவு செய்தல், அவர்களுக்கு உரிமமளித்தல், அதிகாரவளிப்பு மற்றும் வேறு அங்கீகாரங்களுக்கான ஒழுங்குவிதிகளின் 26 ஆம் ஒழுங்குவிதியின் கீழான அறிவித்தல்

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவானது, 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களைப் பதிவு செய்தல், அவர்களுக்கு உரிமமளித்தல், அதிகாரவளிப்பு மற்றும் வேறு அங்கீகாரங்களுக்கான ஒழுங்குவிதிகளின் 26 ஆம் ஒழுங்குவிதிகளின் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டும் எந்த அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் விபரங்கள் கீழே தரப்பட்ட அட்டவணையில் குறித்துரைக்கப்படுகின்றனவோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தைப் பின்பற்றியும், அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குவதற்கான மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் பற்றிய இடாப்பிலிருந்து அதன் பெயரை நீக்குவதற்கான அதன் உளக்கருத்து பற்றி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

ஆணைக்குழுவானது, இவ்வறிவித்தல் திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதி முடிவுறுவதன் மேல் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் பற்றிய இடாப்பிலிருந்து அதன் பெயரை நீக்குவதற்கும் மேற்கொண்டு நடவடிக்கையெடுக்கும் எனவும் எவரேனும் ஆள் சொல்லப்பட்ட காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் அத்தகைய நடவடிக்கை ஏன் எடுத்தலாகாது என காரணம் காட்டலாம் எனவும் மேலும் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**ரெவான் விக்ரமசூரிய,**
கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார
ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி.

கொழும்பு,
2025, செத்தெம்பர் 26.

1A - PG 7265 — 05 (2025/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| *அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயர்* | *உரிம இலக்கம்* | *உரிமத்தின் வகுதி* | *பதிவு இலக்கம்* | *வழங்கப்பட்ட திகதி* |
|---|---|---|---|---|
| அமானா தகாபுல் லைஃப் பிஎல்சி | 2310190020 | அதிகாரமளிக்கப்பட்ட ஆள் | PCC00289542 | 01/12/2023 |

EOG 09-0251

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.